## சட்டமா அதிபரிடம் 50,000 ரூபா நட்ட ஈடு கோரி வழக்கு தாக்கலாகும்!

1976ம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் திகதி இரவு 9-30 மணிக்கு நல்லூர் கோவில் திருவிழா பார்த்துவிட்டு பரராசா என்பவர் வீடு திரும்புகையில், அப்போது கடமையிலீடுபட்டிருந்த யாழ் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 9178ம் இலக்கமுடைய டபிள்யூ. ஏ. ஜே. ஸ்டான்லி எனும் கான்ஸ்டபிளினால் திரு. பரராசா சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்

—4-ம் பக்கம் பார்க்க


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35.

வள்ளுவர் ஆண்டு 2007 புரட்டாதி 27 | ஷவ்வால் 18 | (13-10-76) புதன் புத்தகம் 30 | இதழ் 50


# 'ட்ரயல்-அற்-பார் நீதிபதிகளின் தீர்ப்பு சட்டபூர்வமானது!'

## சட்டமா அதிபரின் மனுவுக்கு அமிர்தலிங்கம் ஆட்சேபனை!

## உயர்நீதிமன்ற விசாரணை இன்று ஆரம்பம்!



அவசரகாலப் பிரகடனம் சட்டபூர்வமற்றது என்ற ட்ரயல்—அற்—பார் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் ஏகமனதான தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தொடுத்துள்ள இரண்டு மேன்முறையீடுகள் சம்பந்தமான விசாரணை இன்று (13.10.76) புதன்கிழமை கொழும்பில் ஆரம்பமாகிறது. சட்டமா அதிபரின் இரண்டு மேன் முறையீடுகளுக்கு எதிராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபரும் வழக்கின் 4-வது பிரதிவாதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனைகள் மீது இன்று திரு. அமிர்தலிங்கத்தின் சிரேட்ட சட்டத்தரணிகளான திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம கியூ.சியும், திரு. எம். திருச்செல்வம் கியூ.சியும் தமது சட்ட வாதங்களை ஆரம்பிப்பார்கள்.

பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன், திரு. ஜி. டி. சமரவிக்கிரமா, திரு வி. ரி. தாமோதரம், திரு. நொயல் இத்தவல, திரு. டபிள்யூ. டீ. குணசேகரா ஆகிய ஐந்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் இந்த விசாரணை ஆரம்பமாகிறது.

சட்டமா அதிபரின் இரு மேன்முறையீட்டு மனுக்களையும் (Rivision, Writ) ஆட்சேபித்து 4வது பிரதிவாதியான திரு. அ. அமிர்தலிங்கம் தமது சட்டத்தரணியான திரு. ஆர். பாலசுப்பிரமணியத்தின் மூலம் பின்வரும் ஆட்சேபனைகளை எழுப்பியிருக்கிறார்.

(1) திரு. அமிர்தலிங்கத்தின் சார்பாக முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைக்கு சட்ட மா அதிபர் பதிலளித்தபோது — அரசியல் சட்டத்தின் அல்லது அவசரகாலச் சட்டவிதிகளின் செல்லுபடியாகும் தன்மை பற்றி முடிவுசெய்ய நீதிமன்றத்துக்கு அருகதை இல்லையென்று கூறியதுடன் அவை செல்லுபடியானவை என்று எடுத்துரைத்திருக்கிறார்.

(2) மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரும், திரு. அமிர்தலிங்கத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு தங்களுக்கு நியாயாதிக்கம் கிடையாதென்று முறைனாகவும், சரியாகவும் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

(3) மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரதுமேற்குறித்த சொல்லப்பட்ட தீர்ப்பு சட்டபூர்வமாகச்செல்லுபடியாவதுடன், திரு. அமிர்தலிங்கத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை விசாரிக்க முடியாது என்று சட்டபூர்வ

—4-ம் பக்கம் பார்க்க

## கிழக்கில் பாதயாத்திரை

தமிழ்ஈழ விடுதலைக் கொள்கையை பட்டிதொட்டியெங்கும் பரப்புவதற்காக கிழக்கு மாகாணத்தில் ஓர் பாதயாத்திரை கடந்த 9-10-76 மாலை உகந்தையிலிருந்து ஆரம்பமாகியுள்ளது. இந்தப் பாதயாத்திரை 29-10-76 வெருகலம்பதியில் முடிவடையும். இந்தப் பாதயாத்திரையை மட்டக்களப்பு பா. உ. திரு. செ. இராசதுரை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத்தலைவர்களில் ஒருவரான திரு. மு. மாணிக்கம், தமிழர் விடுதலைக்கூட்டணிச் சட்டத்துறை செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து, திருமதி கலா தம்பிமுத்து ஆகியோர் முன்னின்று நடத்துகின்றனர். உகந்தையிலிருந்து இந்தப் பாதயாத்திரை ஆரம்பமானபோது அதை திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. ஆரம்பித்து வைத்தார்.

## சிறைபாதுகாப்பிலிருக்கும் தமிழிளைஞர் ஒருவரிடம் பொலிசார் பயமுறுத்து!

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர் ஒருவரை பொலீஸ் அதிகாரிகள் மூவர் அங்குவைத்தே பயமுறுத்தியதாக தெரியவருகிறது. இதுசம்பந்தமாகத் தெரியவருவதாவது:-

புலோலி வங்கிக் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ரி. (தங்க) மகேந்திரன் வெலிக்கடை சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார். இவரிடம் வாக்குமூலம் எடுப்பதற்காக கடந்த 6ம் திகதி மூன்று பொலிஸ் அதிகாரிகள் போயிருக்கிறார்கள். சிறை ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து மகேந்திரன் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். சில விடயங்களை ஒப்புக்கொள்ளும்படி மகேந்திரனிடம் குறித்த பொலிஸ் அதிகாரிகள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அவைபற்றித் தமக்குத் தெரியாதென்றும், தமக்குத் தெரியாத விடயங்களை தம்மால் ஒப்புக் கொள்ள முடியாதென்றும் மகேந்திரன் அவர்களுக்கு கூறியிருக்கிறார். இந்தக்கட

—4-ம் பக்கம பார்க்க

## ஆழிக்குமரனின் புதிய சாதனை!

ஆறுநாட்கள் - ஏறத்தாழ 147 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடந்து புதிய சாதனையை நிலைநாட்டித் தமிழினத்துக்கு பெருமை தேடித்தந்துள்ள ஆழிக்குமரன் வி. எஸ். சி ஆனந்தனைப் பாராட்டுகிறோம். 32 வயதுடைய சட்டத்தரணியான ஆனந்தன் கொழும்பு என்.சி.சி. மைதானத்தில் 260 மைல்கள் தொடர்ச்சியாக நடந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

## புஷ்பராசாவின் தந்தையார் மறைவு!

விசாரணையின்றிக் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டிருக்கும் மயிலிட்டி சி. புஷ்பராசாவின் தந்தையார் திரு. சிதம்பரம் மயிலிட்டியில் திடீரெனக் காலமானார். திரு. புஷ்பராசாவின் சகோதரியான செல்வி. புஷ்பராணியும் புலோலி வங்கிக் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது

—4-ம் பக்கம் பார்க்க

## தென்னாபிரிக்க மக்களுக்கு ஆதரவுதரும் சிறிமாவோ ஈழத்தமிழர் உரிமைகளையும் வழங்க முன்வருவாரா?

### முனைவர் சாலை இளந்திரையன் கேள்வி!

"தென்னாபிரிக்க மக்களின் உரிமைக் கிளர்ச்சி ஆயுதம் தாங்கிய போராட்டமாக உருவாகும் நிலைமை ஏற்படுமானால், கூட்டுச்சேரா நாடுகள் அனைத்தும் அந்த மக்களுக்கு ஆதரவாக நிற்கும்!" என்று முழக்கமிட்டுள்ள இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகா இலங்கை நாட்டுத் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும் வழங்கி, அங்கே சமூக நீதியை நிலைநாட்ட அவர் முன்வர வேண்டும் என்று உள்ளன்போடு அவரை வேண்டுகிறோம்.

இவ்வாறு இலங்கைப் பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் அறிக்கை ஒன்றை அனைத்து இந்திய அறிவியக்கப் பேரவை வெளியிட்டுள்ளது. பேரவையின் சார்பில், அதன் அமைப்பாளர் முனைவர் (டாக்டர்) சாலை இளந்திரையன் அவர்கள் வெளியிட்டுள்ள அந்த அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

"இலங்கை நாட்டில் சிங்களம், தமிழ் என்னும் இரண்டு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன; இரண்டு மொழிகளுக்கு உரிய மக்களும் தனித்தனிப் பகுதிகளி

—4-ம் பக்கம் பார்க்க

## சிறையிருக்கும் திசைவீரசிங்கம் சுகவீனம்!

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக சிங்களச் சிறைச்சாலையில் விசாரணையின்றி தொடர்ச்சியாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மந்துவிலைச் சேர்ந்த திரு. பொ. வே. திசைவீரசிங்கம், தற்போது சிறையில் சுகவீனமுற்று இருக்கிறார். நுளம்புக் கடியினால் ஏற்படும் ஒருவகை நோயால் திரு. திசைவீரசிங்கம் துன்பப்படுவதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தையென்பது வெறும் மாயாவாதம்!

# இலங்கரத்தினுவின் ஆஷாடபூதித்தனம்!

## மொழிவாரித் தரப்படுத்தலை கைவிடும் 'கெனமன் சிபார்சு' குப்பைக் கூடைக்குள்!

## பெட்டைக்கோழிபோல் பீட்டர் கெனமன் கொக்கரிப்பதேனோ?

கோவை மகேசன்

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தமிழ் இனத்தின் பிரச்சினைகள் பற்றிப் 'பேச்சுவார்த்தை' நடத்துவதற்கு பிரதமர் தயாராக இருப்பதாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்தால் தாமே முன்னின்று 'தரகு' வேலை பார்ப்பதாகவும் அமைச்சர் டி. பி. இலங்கரத்தினு கூறியுள்ளதாக 8-10-76 வீரகேசரி ஒரு முன் பக்க முகப்புச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தன்னை ஒரு விடுதலை இயக்கமாகக்காட்டிக்கொள்வது பெரிய கேலிக் கூத்தென்றும், இந்நாட்டில்மேற்கொள்ளப்பட்ட சமூக பொருளாதார சீர்திருத்தங்களுக்கு விரோதமாகவும், திருகோணமலை கடற் தளத்தை அகற்றும் முயற்சிகளுக்கு எதிராகவும் தமிழரசுக்கட்சி செயல்பட்டு வந்திருப்பதாகவும், தமிழர்விடுதலைக்கூட்டணியினர் தமிழ் மக்களுக்கு விடுதலை கோரவில்லையென்றும், உண்மையில் அவர்கள் சமூக முன்னேற்றத்திலிருந்துதான் விடுதலை கோருவதாகவும், தமது கம்யூனிஸ்ட் கட்சி நாட்டைப் பல்வேறு அரசுகளாக கூறுபோடுவதை எதிர்ப்பதாகவும், அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் கொழும்பு கிராண்ட்பாஸில் நடைபெற்ற தமது கட்சியாளர்கள் கூட்டத்தில் பேசியிருக்கிறார்—இதையும் வீரகேசரி தனது 9-10-76 இதழில் வெளியிட்டிருக்கிறது.

### இரு அமைச்சர்கள் இருவிதப் பேச்சு

முதல்நாள் அமைச்சர் இலங்கரத்தினு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நேசக்கரம் நீட்டுகிறார்! அல்லது நீட்டுவதுபோல நாடகமாடுகிறார்! மறுநாள் மற்றோர் அமைச்சரான பீட்டர்கெனமன் தமிழர் விடுதலைக் கூட்டணி மீது அவதூறுகளை அள்ளி வீசுகிறார்! இதனைத் தமிழ் மக்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும்!

இந்த இரு அமைச்சர்களும், தமிழ்பேசும் மக்களின் அதிகாரத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்ளாத யாரோ சிலர், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தம்மிடம் தந்திருப்பதாக சொல்லப்படும் 20 அம்சத்திட்டம் பற்றியே திரும்பத் திரும்பத் தெளிவாகப்பேசியிருக்கிறார்கள். தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கையையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தமிழ் சமுதாயத்திலிருக்கும் சில 'ஏனோ தானோக்களை' அழைத்துப் பேசி, 'தமிழர் பிரச்சினையை' எப்படியாவது 'சரிக்கட்டி' விடலாம் என்று இன்றும் அரசாங்கம் மனப்பால் குடித்துவருகிறது.

### கபட நாடகம்

குமாரசூரியரை தமிழ் மக்களின் 'சிந்தெட்டிக்' தலைவராக ஆக்கும் முயற்சியில் கடந்த ஆறு ஆண்டுகளாக அரசாங்கம் ஈடுபட்டுப் படுதோல்வியடைந்து விட்டது. அருளம்பலம், தியாகராசா, ராசன்செல்வநாயகம், மார்டின் போன்றவர்களை பிடித்தும், அவர்களிலும் 'வேலையில்லை' என்பதும் இப்போது அரசுக்குப் புரிந்துவிட்டது; கண்ணே கண்ணு, ஒண்ணே ஒண்ணு என்று வைத்திருந்த ஒரேயொரு நகர 'மேயரும்' நரகலோகம்போய்விட்டார் அமைப்பாளர்கள் என்ற பெயரில் வந்துசேர்ந்த 'தரகர்களும்' சுயநல சுருட்டல் பேர்வழிகளாக இருக்கிறார்களே தவிர — தமிழ் மக்களிடம் அவர்கள் அணுவளவும் செல்வாக்கற்றவர்கள் -செல்லாக்காசுகள் என்பதும் இப்போது அரசுக்கு விளங்கிவிட்டது! எனவேதான் இப்போது எங்கோ கிடந்த 40பேரை பிடித்து 20 அம்ச கண்ணு மூசுவிளையாட்டுக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றிவிடலாமென்று அரசு கபடநாடகமாடுகிறது!

### திசை திருப்பும் முயற்சி

இந்த நிலையில் தமிழர்விடுதலைக்கூட்டணி விரும்பினுல் பேச்சுவார்த்தைக்கு அரசு தயார் என்று இலங்கரத்தினு கூறியிருப்பது வெறும் ஆஷாட பூதித்தனமும், கபடத்தனமும நிறைந்த வார்த்தை ஜாலமே தவிர அந்தரங்க சுத்தியானதல்லவென்றே நாம் கருதுகிறோம்.

தமிழ் ஈழ விடுதலைவேண்டி நிற்கும் தமிழ் மக்களின் சிந்தனையை திசை திருப்புவதற்கும் பலவீனப்படுத்துவதற்குமே அரசாங்கத் தரப்பிலிருந்து இந்தப் 'பேச்சுவார்த்தை' எனும் மாயாவாதம் அப்போதைக்கப்போது எழுப்பப்படுகிறது.

### கூட்டணியின் நிலை

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தளவில்— பேச்சுவார்த்தை மீது அதன் நிலை மிகவும் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. தமிழ் தேசிய இனம் ஒரு தனித் தேசிய இனம்; சுயநிர்ணய உரிமையை உபயோகிப்பதற்கு முற்றிலும் தகுதிபடைத்த இனம்— என்ற அந்த அடிப்படையை சிங்கள அரசாங்கம் ஏற்றுல் மட்டுமே, அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி செல்லும் என்று கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்! எனவே தமிழர் விடுதலைக் கூட்டணியை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாக கூறுபவர்கள்— கூட்டணி முன்வைத்திருக்கும் இந்த அடிப்படையை ஏற்றுக் கொள்ளுகிறார்களா என்பதையும் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும!

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையிலன்றி வேறு எந்த அடிப்படையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இனிமேல் தீர்வுகாண முடியாது என்பதை ஆட்சிக் கட்டிலில் இருப்போரும் அடுத்து ஆட்சிக்கட்டிலுக்கு வரவிருப்போரும் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்!

அதைவிடுத்து— பொதுத்தேர்தல் நெருங்கிவரும் சமயத்தில்- பேச்சுவார்த்தையென்று நாடகமாடி தமிழர் விடுதலைக் கூட்டணியை அந்த வலைக்குள் வீழ்த்தி—அதன் மூலம், சிங்களப் பகுதிகளிலுள்ள தமிழர்களின் வாக்குகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தட்டிக் கொள்ளலாம் என்று அமைச்சர் இலங்கரத்தினு திட்டமிடுவாராஞல்— அவர் தனது முகத்தில் தானே கரியை பூசிக்கொள்வது நிச்சயம்!

### கெனமனின் கொக்கரிப்பு

இனி, பீட்டர் கெனமனுக்கு வருவோம்!

எல்லா தேசிய இனங்களுக்கும் பூரண சுதந்திரமும், பிரிந்துபோகும் உரிமையும் உண்டு— [illegible] மாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர் சோசலிச— கம்யூனிச சிற்பிகளான கார்ள்மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் போன்ற மேதைகள். பிரகடனப்படுத்தியதுமட்டுமன்றி- அதை செயலிலும் காட்டியிருக்கிறார்கள் சோவியத் நாட்டில்!

ஆனல் அந்த சோவியத்தை சொர்க்கபுரி என்று கூறும் பீட்டர் கெனமன்— லெனினுக்காகவும் ஸ்டாலினுக்காகவும் மணிக்கணக்கில் கண்ணீர்வடிக்கும் பீட்டர் கெனமன்— ஈழத்தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை, விடுதலைக் கோரிக்கையை சிங்கள ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்துகொண்டு விடுதலைக் கோரிக்கையை கேலிக்கூத்தென்று பரிசாசம் செய்கிறார்; லெனினின் உன்னத தத்துவத்தை தனது காலின் கீழ் போட்டு மிதிக்கிறார்!

### கெனமனின் முற்போக்கு இலட்சணம்

தமிழரசுக்கட்சி சமூக பொருளாதார சீர்திருத்தங்களுக்கு விரோதமாக நடந்ததாக நரம்பற்ற நாக்கினுல் தூற்றும் சாட்சாத் பீட்டர் கெனமனினதும், அவரது கட்சியினதும் 'முற்போக்கு' சங்கதிகள் நமக்குத் தெரியாதா என்ன?

தமிழ்மொழிச் சட்டப் பிரமாணங்களுக்கு எதிராக இவரும், இவரது கம்யூனிஸ்ட் கட்சியும் தமது சகாக்களுடன் சேர்ந்து 1966ம் ஆண்டு சனவரி 8ம் திகதி கொழும்பில் நடத்திய பிரபல "தோசை வடை நல்லெண்ணய்' இனவெறி ஊர்வலம் எத்துணை 'முற்போக்கு' நடவடிக்கை?

அதே தினத்தில் இவரது கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து தமிழ்மொழி பிரமாணங்களுக்கு எதிராக நடத்திய இனவெறி வேலை நிறுத்தம்— ஆஹா அது எத்துணை முற்போக்கானது?

கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தத்துவ வேறுபாடு காரணமாக சண்முகதாசன் வெளியேறிய போது— அவரை 'தமிழன்' என்று இனங்காட்டுவதற்காக 'நாகலிங்கம் சண்முகதாசன்' என்று முழுப்பெயர் சொல்லி பீட்டர் கெனமன் கும்பல் பேசியும் எழுதியும் காட்டியது எத்துணை முற்போக்கு?

தமிழ்மொழிச் சட்டத்தை எதிர்த்து 1966ம் ஆண்டு சட்டவிரோத ஊர்வலம் நடத்தி சூடுபட்டு இறந்த இரத்தினசார தேரோ என்னும் சிங்கள பௌத்த வெறியனை மறந்துவிடாமல் நினைத்துவைத்து, 1970ம் ஆண்டு அவனுக்கு நினைவு ஸ்தூபி கட்டி அந்த வெறியனுக்கு பீட்டர் கெனமனும் சேர்ந்து புகழ்மாலை சூட்டியது எத்தனை முற்போக்கு நடவடிக்கை?

சாதியும் தீண்டாமையும் அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமென்றும், அதற்கான சரத்து அரசியல் சட்டத்திலிடம்பெற வேண்டுமென்றும் அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுக்கட்சி பா. உ. க்கள் திருத்தம் கொண்டுவந்தபோது, அதை பீட்டர்கெனமனின் கம்யூனிஸ்ட் கட்சியும், எம். சி. சுப்பிரமணியமுமாகச் சேர்ந்து முழுமூச்சுடன் எதிர்த்து வாக்களித்தது, எத்தனை பெரிய 'சமூக சீர்திருத்தம்'?

இப்படி எழுதிக்கொண்டே போனுல், இன்னும் பலவற்றைக்கூற நம்மால் முடியும்! கண்ணுடி வீட்டிலிருந்து நமக்கு கல்லெறிந்து பார்க்கிறார் தோழர் கெனமன்!

### திருமலை கடற்றளம்

திருகோணமலை கடற்படைத்தளத்தை சிங்கள அரசாங்கம் தன்னிச்சையாக தேசியமயமாக்கியதை தமிழரசுக்கட்சி எதிர்த்தது உண்மை—ஏன்?

அதுவும் தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் அடிப்படையிலேயே!

திருகோணமலை தமிழ் ஈழத்தின் தலைநகர்; அங்கு எதைச் செய்வதென்ருலும் தமிழர்களின் சம்மதத்தின் பேரிலேயே செய்யவேண்டும்! ஆனல் பண்டாரநாயகாவோ — திருகோணமலை கடற்தளம் சம்பந்தப்பட்ட பிரச்சினையில், தமிழர்களைப் புறக்கணித்து — அன்றைய திருகோணமலை பா.உ.வுடன் கூடக் கலந்துகொள்ளாமல் கடற்படைத் தளத்தை தேசிய மயமாக்க முடிவு செய்தார்!

கடற்படைத்தளம் சம்பந்தமாக பண்டாரநாயகா கடைப்பிடித்த இந்த 'அணுகு முறைக்கு' தமிழரசுக்கட்சி அன்று ஆட்சேபம் தெரிவித்ததே தவிர — வெள்ளைக்காரனை இங்கேயே இருக்கும்படி வெற்றிலைவைத்து அழைக்கவில்லை!

திருகோணமலைத் துறைமுகத்தைவிட்டு வெள்ளையனை அகற்றுவதென்ருலும்— அதைத் திருகோணமலையின் சொந்தக்காரனுன தமிழன்தான் செய்யவேண்டுமே தவிர—சிங்களவனுக்கு அந்த அதிகாரமில்லை! இதுவே கடற்படைத்தளத் தேசியமயத்துக்கு தமிழரசுக்கட்சி காட்டிய எதிர்ப்பின் உள்ளாந்தர நோக்கமாகும்.

இது புரியாமல் — அல்லது புரிந்தும புரியாததுபோல

—3-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தன் வரலாறு தெரியாததே தமிழனின் வீழ்ச்சிக்குக்காரணம்!"

## மகாஜனுக் கல்லூரியில் ஈழவேந்தன்!

அண்மையில் மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் அக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் சார்பில் அம் மன்றத்தலைவர் திரு. சொ. செந்தில்மோகன் தலைமையில் திரு. ஈழவேந்தன் 'தமிழன் வாழவேண்டின்'-எனும் தலைப்பில் தமிழனின் சிந்தனையை தூண்டும் முறையில் அரியதொரு உரையினை நிகழ்த்தினுர். இவரின் உரையை கல்லூரி முதல்வர் உட்பட பல, ஆசிரியர்களும் மாணவமாணவிகளும் செவிமடுத்துப் பயன்பெற்றனர்.

இன்று எம் இனத்தை எதிர்நோக்கும் அடுத்த பெரும் பேராபத்து தமிழனுக்குத் தன் வரலாறு தெரியாததே என்று தன் உரையில் குறிப்பிட்ட ஈழவேந்தன் அவர்கள் தன் வரலாறு தெரியாத எந்த இனமும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததில்லை என்று கூறினுர். 'வரலாற்று உணர்வு உரிமைக்கு வித்து' என்று குறிப்பிட்ட அவர் உரிமைக்கு வித்தாக விளங்கும் வரலாற்று உணர்வை நாம் நிறையப் பெறவேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் இந்நாட்டில் அரசியல் வாதிகளாலும், ஆளும் இனத்திற்கு அடிவருடிகளாக விளங்கும் கலாநிதிகளால் படைக்கப்படும் புது வரலாறுகளால் வரலாறு திரிக்கப்பட்டு கட்டுக்கதைகளாக மாறிவருகின்றன என்பதனை அண்மையில் எழுந்துள்ள பாடநூல்களை எடுத்துக்காட்டாக காட்டிய ஈழவேந்தன் அவர்கள் வரலாற்றை வரலாருக படிப்பிக்கின்ற பெரும் பொறுப்பை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினுர்.

அவர் மேலும் பேசுகையில் வரலாற்று அடிப்படையில் உண்மைகளை ஆராய்கின்றபோது சிங்கள இனத்திற்கு என்னென்ன உரிமைகள் உண்டோ அதேயளவு உரிமைகள்—இல்லை, அதை மிஞ்சிய உரிமைகள் எமக்கு உண்டு என்பதனை ஞானப்பிரகாச அடிகள், சேர். போல் பீரிஸ், ஜீ. சி. மென்டிஸ், மாவம்சம்போன்ற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கினுர். விஜயன் இந்நாட்டிற்கு கள்ளத் தோணியாக முதலில் இங்கு வருகை தருவதற்கு முன்பு மட்டுமல்ல அவன் கருவிலே உருவாகுவதற்கு முன்புகூட இந்நாட்டின் மூத்த குடிமக்களாக எம் மூதாதையர் வாழ்ந்தார்கள் என்பதை சேர். போல் பீரிசின் வரலாற்று நூலின் துணைகொண்டுநிலைநாட்டிய அவர், அவர்கள் 32 தமிழ் மன்னர்களை கைப்பற்றிய பின்பு தான் மீண்டும் துட்டகைமுனு ஆட்சிக்கு வந்தான் என்று மாவம்சம் கூறும் கருத்தினை எடுத்து விளக்கி துட்டகைமுனு தமிழ் மன்னர்களை வென்ருனே, தோற்ருனே என்பது ஒருபுறமிருக்க அவன் வாழ்ந்த காலத்தில் 32 தமிழ் மன்னர்கள் இந்நாட்டை ஆண்டார்கள் என்பதனை மாவம்சம் ஒத்துக்கொள்கிறதென்று வலியுறுத்தியபோது கூடியிருந்தோர் கையொலி எழுப்பி வரவேற்றனர்.

வரலாற்றுக் குறிப்பையொட்டி இறுதியாக அவர் வலியுறுத்துகையில், 1926ல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கூறிய கூற்றையும் சான்றுகாட்டி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தமிழர்கள் தம் தனித்துவத்தைப் பேணியே வாழ்ந்தார்கள் என்பதனை பண்டாரநாயக்காவும் ஒப்புக்கொண்டார் என்பனை சுவைபட சுட்டிக்காட்டினுர்.

தமிழினம் வாழ்வதற்கு தமிழ்மொழியின் வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்த உலகத்துப் பேரறிஞர் மேற்கோள்களை அவர் எடுத்து விளக்கியதோடு 1824ல் எடுக்கப்பட்ட மாதிரிக் குடித்தொகையின்படி இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 24 சதவீதமாக இருந்திருக்கையில் இன்று இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை (மலையகத் தமிழர் நீங்களாக) 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியுறுவதற்கு தமிழர்கள் மலேசியா சென்றதா, மலேரியாக் காச்சலா, தமிழன் பிள்ளைப்பெற மறந்துவிட்டானு, மறுக்கிருனு என்று அடுத்தடுத்து கேள்வியினைக் கேட்ட அவர் இவையெல்லாம் துணைக்காரணங்களாக அமையினும் இவ்வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் தமிழ் இனம் சிங்கள இனமாக மாறியதென்பதை குறிப்பாக வடமேற்குப் பகுதியில் ஏற்பட்டு வரும் இனமாற்றத்தை எடுத்துக்காட்டாகக் காட்டி விளக்கினுர். இவரின் இக் கூற்று தமிழனின் வருங்காலம் பற்றி பலரை ஆழமாகச் சிந்திக்கச் செய்தது என்பதை அங்கிருந்தோர் முகங்கள் எடுத்துக்காட்டின.

அடுத்து ஒரு இனத்தின் வாழ்விற்கு மொழியின் வாழ்வு முக்கியம் என்பதை ஏற்றுக்கொண்ட போதும் ஒரு இனத்தின் வாழ்வு மொழியை மிஞ்சிய நிலையில் அவ்வினம் வாழும் நிலப்பரப்பின் நிலையான பாதுகாப்பிலே தங்கியிருக்கின்றதென்பதனை வரலாற்று ஆசிரியரான மூக்கேஜி, முகமதலிஜின்னு, மாவோ, ஸ்டாலின், லெனின் ஆகியோர் எடுத்தாண்ட கூற்றுக்களை அடுத்து அடுத்து அவர் ஆணித்தரமாக விளக்கியபோது கூடியிருந்தோர் மெய்மறந்து கேட்டனர். பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் பண்டாரநாயகா கூட இதனை ஏற்றுக்கொண்டார் என்பதனை அவரின் மேற்கோளையே கொண்டு எடுத்து விளக்கினுர்.

தமிழன் வாழ மொழியும் நிலமும் வேண்டுமென்று கூறிய அவர் இவற்றின் நிலையான பாதுகாப்பு எமக்கென்று ஒரு அரசை தோற்றுவிப்பதனுல்தான் உருவாக்க முடியும் என்று கூறிய அவர் சேர். பொன். இராமநாதன், சேர். பொன் அருணுசலம் ஆகியோர் காலம்தொட்டு இன்றுவரை உருவாகிய அரசியல் நிலைமைகளை, சட்டங்களை, ஒப்பந்தங்களை, தமிழர்களும் தமிழ்த்தலைவர்களும் சிங்கள இனத்தின் தேவைகளுக்கு பயன்படுத்தியபின் தூக்கியெறியப்பட்ட நிகழ்ச்சிகளை கோவைப்படுத்திக் கூறிய அவர் இன்று எமக்குள்ள ஒரேயொரு வழி தமிழ் ஈழத்தை அமைப்பதேயென்று அவர் கூறினுர்.

எனவே 'தமிழன் வாழ வேண்டின்' எமக்குத் தேவையான அடிப்படை பண்புகள் தன்னம்பிக்கை, தன்னலமறுப்பு குறிக்கோளுடைய வாழ்வு, வரலாற்று உணர்வு, மொழியைப் பேணல், எம் நிலத்தை எமது நிலையிலும் நிலையாகப் பாதுகாக்க உறுதி பூணுவோம், இவையனைத்திற்கும் மேலாக 'தமிழன் வாழவேண்டின் தமிழன் தன்னை ஆளவேண்டும்' என்பது எம் முடிந்த முடிவாக அமையட்டும் என்று ஈழவேந்தன் கூறிமுடித்தபோது மண்டபம் அதிர கையொலி எழும்பியது.

### பேச்சுவார்த்தை.

—2-ம் பக்கத் தொடர்

வேண்டுமென்றே பிதற்றியிருக்கிருர் பீட்டர்கெனமனுர்.

பாவம், தரப்படுத்தல் பற்றி இவர் கொடுத்த சிபார்சையே — அதாவது மொழிவாரித் தரப்படுத்தல் அகற்றப்ட வேண்டுமென்ற சிபார்சையே — சிங்கள பௌத்த தீவிர வாதிகளுக்கு அஞ்சி குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டது அரசு. அதை அமுல்படுத்தச் செய்யும் திராணிகூட இல்லாது பதவியில்வெறுமனே ஒட்டிகொண்டிருக்கும் பீட்டர்கெனமன் தான் 'தமிழர் பிரச்சினை'யை தீர்க்கப்போகிருராம்! பரிதாபம்!

கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு, பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்ட 'ஐந்து அம்சம்' பற்றி இவர் எதுவும் பேசக்காணும்; இவர் கட்சியைச் சேர்ந்த எழுத்தாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்வோர் தயாரித்த 12 அம்சம் பற்றியும் பேச்சுமூச்சில்லை! இப்போது எங்கோ 'வம்பிலே பிறந்த' 20 அம்சத்தை கட்டியழுகிருர் பீட்டர்கெனமன்!

பரிதாபப்படுகிருேம்! அதே நேரத்தில் ஒன்றை மட்டும் கூறிக்கொள்கிருேம்!

ஐந்து அம்சமல்ல — ஆறு அம்சமல்ல — 20 அம்சமல்ல —நூறு அம்சம்தான் வந்தாலும் — தமிழ் தேசிய இனம் தன்னைத்தானே ஆளும் அடிப்படை அம்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலொழிய — அதாவது தமிழ்ஈழம் தனிநாடாகுலொழிய — தமிழர் பிரச்சினை ஒருபோதும் தீரப்போவதில்லை — தமிழ்பேசும் மக்கள் திருப்தியடைந்து உட்கார்ந்துவிடப் போவதுமில்லை! இது உறுதி!

### இன்றைய கருத்தரங்கு

பம்பலப்பிட்டி லோறிஸ் வீதியிலுள்ள 51ம் இலக்க இல்லத்தில் (புனித மரியாள் மதவாலயத்துக்கு முன்னுல்) இன்று புதன் கிழமை மாலை 6மணிக்கு திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் இலங்கைப் பல்கலைக் கழக கொழும்புவளாக கல்வித் துறை விரிவுரையாளர் திரு பி. சந்திரசேகரம், 'தாய் மொழிக் கல்வியும் இன்றைய தமிழர் நிலையும்' எனும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

# தமிழீழம் அமைப்பது ஒன்றே தமிழர் பிரச்சினையைதீர்க்கும்

## குருக்கள்மடத்தில் அன்ரன்முழக்கம்

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள குருக்கள் மடத்தில், தமிழ் இளைஞர் பேரவையினரின் கருத்தரங்கொன்று 3-10-76 ஞாயிற்றுக் கிழமையன்று இடம்பெற்றது.

திரு. ச.தி. நவரட்ணராசா அவர்களின் தலைமையில் ஆரம்பமான இக்கருத்தரங்கில் தமிழ் இளைஞர் பேரவைக் கொழும்புக் கிளைத் தலைவரும், இடைக்கால அமைப்பாளர்களில் ஒருவருமான திரு. இரகுபதி பாலஸ்ரீதரனும்; பருத்தித்துறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவையின் தலைவரும், இளம் சட்டத்தரணியுமான திரு. கனக. மனேகரனும் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டனர்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இக் கருத்தரங்கினை திரு. பூ. கணேசலிங்கம் அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து தலைவர் அவர்கள் தனது தலைமையுரையில் "இளைஞர்கள், பெரியோர், மகளிர் அனைவரும் ஒருங்கிணைந்து போராடினுறதான் தமிழ் ஈழத்தை அமைக்க முடியுமென்றும், இளைஞர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பிரிந்திருக்காமல் ஒன்றுபட்டுழைக்க முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தலைவர் உரையைத் தொடர்ந்து மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர் திரு. கா. அன்ரன் சொற்பெருக்காற்றுகையில்; தமிழன் தன்னைத்தானே ஆளும் ஒரு நிலை உருவானுற்தான், எமது கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியன பாதுகாக்கப்படுமென்று குறிப்பிட்டார். தொடர்ந்தும் பேசுகையில், தமிழர் கூட்டணியினர் முன்பு கேட்ட 6 அம்சத் திட்டத்தையோ, வேறு சிலர் இன்று கேட்கின்ற 20 அம்சத் திட்டத்தையோ, ஏற்றுக்கொள்வதற்கில்லை எனவும், தமிழ் ஈழம் என்பதுதான் தமிழர்கள் அனைவரினதும் முடிந்த முடிவென்றும் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து திரு. வ. ஆ. தங்கவேலாயுதம் பேசியபோது; நாங்கள் இங்கு தேர்தலுக்கு வாக்குச் சேகரிக்க வரவில்லை. இயக்கத்தை வளர்ப்பதற்காகவே வந்துள்ளோம். நாடு போகின்ற போக்கில் தேர்தல் நடக்காமலும் போகலாம். ஆகவே எங்களில் எவராவது தேர்தலை பற்றி எண்ணக்கூடாது. பண்டாரநாயக்கா இறந்த தினத்தன்று 10,000 சேகுவேராக்களுக்கு, ஆயுதம் ஏந்திப் புரட்சி செய்தவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்துள்ளார் ஸ்ரீமாவோ அம்மையார் அவர்கள். ஆனுல் அகிம்சை வழியில் போராடிய குற்றத்திற்காக தமிழ் இளைஞர்களை விசாரணையோ விளக்கமோ எதுவுமின்றி ஆண்டுக்கணக்காக சிறையில் அடைத்து வைத்துள்ளார். இது அவரது மாற்ருந்தாய் மனப்பான்மையையே காட்டுகின்றது. மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற இரு சிங்களக் கட்சிகளும் தமிழர்களின் உரிமைகளைப் பற்றி சிந்திக்கப் போவதில்லை. இழந்துவிட்ட எமது நாட்டை மீட்பதற்காக— தமிழ் ஈழத்தை அமைப்பதற்காக வீட்டுக்கொரு இளைஞனை நீங்கள் தந்துதவ வேண்டும்" என்ருர்.

"ஆண்டுக்கணக்காக மேடைகளில் பேசிப்பேசியே காலத்தை வீணுக்கிவிட்டோம். இனிமேலும் பேசிக் காலத்தை வீணுக்க முடியாது. தமிழர்கள் இந்நாட்டில் சுதந்திரமாக வாழ வேண்டுமென்ருல் இழந்துவிட்ட எமது நாட்டை— தமிழ் ஈழத்தை மீட்டேயாக வேண்டும்" என திரு. பூ. கணேசலிங்கம் முழக்கமிட்டார்.

திரு. கணேசலிங்கத்தின் உரையைத் தொடர்ந்து பேசிய இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள் "அன்றையஎம் தலைவர்கள் விட்ட பிழைக்காகத்தான் இன்று தமிழன் ஈழத்தில் செத்துக் கொண்டிருக்கின்ருன். இன்று நாங்களும் அதே பிழையைச் செய்துவிட்டால் நிச்சயமாக எதிர்காலச் சந்ததி எம்மைத் திட்டித் தீர்க்கும் எமக்காக இல்லாவிடினும் எதிர்காலச் சந்ததிக்காகத் தானும் நாம் தமிழ்ஈழத்தை அமைத்தேயாகவேண்டும். தமிழ் ஈழம் என்பது முடிந்த முடிவு. இன்று தமிழ் ஈழப் போராட்டத்தில் வேண்டிய உதவிகளைச் செய்ய எமது தலைவர்கள் காத்திருக்கின்ருர்கள். இளைஞர்கள் போராடமுன்வரவேண்டும்" என்ருர். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த உரிமையைச் சரிவரப் பாவிக்காத நாம் தமிழர்களின் உரிமையைக் கோரமுடியாது.

—4-ம் பக்கம் பார்க்க

### கருத்தரங்கும் நிதிஒப்படைப்பும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 16-10-1976 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு பருத்தித்துறை சிவன் கோவில் மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. இக்கருத்தரங்கிற்கு சட்டத்தரணி திரு. ம. வேலும்மயிலும் தலைமை தாங்குவார். பருத்தித்துறைத்தொகுதி தமிழ் இளைஞர் பேரவையினுல் செல்வச்சந்நிதி, வல்லிபுரக் கோவில் ஆகியவற்றில் உண்டியல் மூலம் சேர்க்கப்பட்ட "சிறைஇளைஞர் குடும்பநிதி" இக் கருத்தரங்கில் வைத்து செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களால் தமிழ் மகளிர் பேரவையின் பருத்தித்துறைக் கிளையும் அமைக்கப்படவுள்ளது. இக்கருத்தரங்கில் திரு. க. துரைரத்தினம் (பா. உ.) திரு. க. ஜெயக்கொடி, திரு. மு. சிவசிதம்பரம், திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி. அமிர்தலிங்கம் ஆகியோர் பங்குபற்றவுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

சந்திரசேகரா கொலை முயற்சி;

# சந்தேக நபர் முல்லை பிணையில் விடுதலை!

ஏ. எஸ். பி. திரு. சந்திரசேகராவை கொலை செய்ய முயன்றதாக அவசர காலப் பிரமாணங்களின் கீழ் சந்தேகத்தின் பேரில் 5-9-76ல் சீ. ஐ. டி.யினரால் கைதுசெய்யப்பட்டு, வெலிக்கடை விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்த அளவெட்டியை சேர்ந்த ஞா. சற்குணராசா அல்லது முல்லை என்ற இளைஞர் 11-10-76ல் ரூபா ஆயிரம் காசுப்பிணையில் நீதவான் திரு. சுந்தரலிங்கம் அவர்களால் விடுதலைசெய்யப்பட்டார். சந்தேக நபரான முல்லையின் சார்பில் சட்டத்தரணிகள் திரு. மு. சிவசிதம்பரம், எஸ். சுமந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடினர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இரண்டுவாரத்துக்கொருமுறை சந்தேக நபர் ஆஜராகவேண்டுமென்றும் நீதவான் உத்தரவிட்டு, வழக்கை நவம்பர் 10ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## நடேசுக்கு சுவீடனிலிருந்து கடிதம்!

சிறையிருக்கும் 1கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த தமிழ் இளைஞர் பூ. நடேசானந்தத்துக்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் சுவீடன் நாட்டுப் பிரிவைச்சேர்ந்த 'போஹன்சன்' என்பவர் சுவீடனிலிருந்து கடிதம் எழுதியுள்ளார். விசாரணையின்றி சிறைவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி அந்தந்த நாட்டு அரசுகளுக்கு தமது இயக்கம் கடிதங்கள் எழுதுவதுடன் அப்படிப் பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் பண உதவியுட்பட சகல உதவிகளையும் தமது இயக்கம் செய்யக் காத்திருக்கிறது என்று திரு. போஹன்சன் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மகளிர் பேரவை பிரார்த்தனை

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளையினர் நடத்தும் வாராந்தப் பிரார்த்தனை 15-10-76 வெள்ளிக்கிழமை மாலை 5.30 க்கும் 6 மணிக்குமிடையில் குமபனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடைபெறும். அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளும்படி மகளிர் பேரவையினர் அழைக்கின்றனர்.

### ட்ரயல்-அற்-பார்...

—1-ம் பக்கத் தொடர்

மாகவே மறுதலித்திருக்கிறார்கள்.

(4) இந்த வழக்கில் 'றிட்' மனுக்கள் மூலம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கோருவதற்கு சட்டமா அதிபதிக்கு சட்டப்படி உரிமை கிடையாது.

(5) எப்படியிருந்த போதிலும்—அரசியல் சட்டத்தின் 5, 121, பகுதிகளுக்கமைய 4வது பிரதிவாதியான திரு. அமிர்தலிங்கத்தின் மீது விசாரணை நடத்தும்படி கோரி ட்ரயல்—அற்—பார் மேல் நீதிமன்ற நீதிபதிகளானமுதல்மூன்றுபிரதிவாதிகளுக்கும் கட்டளையிட்டு பணிப்புரை செய்யும்படி "றிட் ஆப் மண்டமஸ்" விடுக்கமுடியாது.

(6) 1976ம் ஆண்டு மே 17ம் திகதி வெளிவந்ததும் 213/5ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததும் 1976ம் ஆண்டின் 5வது பிரமாணங்களுமான அவசர காலப் பிரமாணங்களின் 59வது பகுதியும், 28-5-1976 214/16ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த திருத்தப்பட்ட 59(ஏ) பிரமாணமும் சட்டபூர்வமற்றவையாயும் சட்ட ஒப்புதலற்றவையாயுமிருப்பதாக நீதிபதிகள் முடிவுக்கு வந்து, திரு. அமிர்தலிங்கத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு தமக்கு நியாயாதிகம் கிடையாதென்று அறிவித்ததுடன் வழக்கையும் தள்ளுபடி செய்து 10-9-76ல் தீர்ப்பளித்திருந்தனர்.

(7) இந்தத் தீர்ப்பு சட்டப் படி செல்லுபடியானதுடன் திரு. அமிர்தலிங்கமும் வழக்கிலிருந்து சட்டப்படியே விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார்.

(8) நீதி நிர்வாகச் சட்டத்தின்படியும், அரசியல் அமைப்பு சட்டவிதிகளின் படியும், மேற்படி தீர்ப்பை அளித்த நீதிபதிகள், ஒரு நீதிமன்றமாகஇருக்கவில்லை!

(9) அரசியல் சட்டத்தின் 5, 121, 134, 45 (4) ஆகிய பிரிவுகளுக்கு விரோதமானதாக அவசரகாலப் பிரமாணங்கள் அமைந்திருக்கிறது.

(10) அரசியல் சட்டத்தின் 18வது பிரிவின் கீழ் வகுக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் அது அமைந்திருக்கிறது.

ஆகவே சட்டமா அதிபரின் விண்ணப்பத்தைசெலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு உயர் நீதிமன்றத்தை திரு. அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மீளாய்வு மனுமீது திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் 'றிட்' மனுமீது திரு. எம். திருச்செல்வமும் வாதங்களை நிகழ்த்துவார்கள். இச்சட்ட வாதங்கள் முடிவடைந்த பின்னர், திரு. வி. என். நவரத்தினம் சார்பில் திரு. எச். ஜெயவர்த்தனவும், க. துரைரத்தினம் சார்பில் திரு. எஸ். நடேசன் கியூ. சீயும், பண்டிதர் கா. பொ. இரத்தினம் சார்பில் முன்னாள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் புள்ளைநாயகமும் தங்கள் கருத்துக்களை எடுத்துரைப்பார்கள்.

# "பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன்சேர்ந்து தமிழ்ஈழத் தேசியவாதிகள் கெரில்லா பயிற்சி பெறுகின்றனராம்!"

## கார்டியன் எழுதுகிறது இப்படி!

"இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் ஒரு தனித்தமிழ் நாட்டை உருவாக்கலாம் என்று நம்பும் தமிழ் தேசியவாதிகள் கணிசமான இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், அவர்கள் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திலும், வேறு அங்கீகரிக்கப்பட்ட விடுதலை இயக்கங்களிலும் சேர்ந்து கெரில்லா போர் பயிற்சி பெற்று வருவதாகவும் 30-8-76 லண்டன் கார்டியன், பத்திரிகை ஒரு செய்திக் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

அக் கட்டுரையை மாட்டின் வூலாகொட் எழுதியிருக்கிறார். அவர் அதில் கூறியிருப்பதாவது:-

"இரண்டு சட்ட பூர்வமான அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய அதிகாரபூர்வமான விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தனிநாடு இலட்சியத்தையடைவதற்கு காந்திய முறையில் அஹிம்சைக் கொள்கையையே மிகவும் ஜாக்கிரதையுடன் பின்பற்றி வருகிறது. உத்தேச தமிழ் நாட்டை அமைதியான முறையில் உருவாக்குவதற்கு சிங்களப் பெரும்பான்மையினர் இணங்கிவராவிட்டால், வன்முறை தவிர்க்க முடியாததாகிவிடும் என்று அதன் தலைவர்கள் பலர் மேலெழுந்தவாரியான எச்சரிக்கைகளை விடுத்துள்ளனர்.

"தமிழ் தேசத்தை உருவாக்குவதற்கு வன்முறையே ஓரே வழியென்று நம்பும் தமிழ் இளைஞர் மத்தியிலுள்ள சக்திகளுக்கு தாங்கள் முழுவதும் ஜவாப்தாரிகள் அல்லர் என்பதையும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இந்தச் சட்டவிரோத இளைஞர் இயக்கங்களுடன் தொடர்புடைய வட்டாரங்களின்படி, சில இளைஞர்கள் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனும், வேறும் விடுதலை இயக்கங்களுடனும் தொடர்புகொண்டுள்ளதுடன் சிலர் கெரில்லா பயிற்சி பெறுவதற்காக வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனராம். இவை எவ்வளவுதூரம் உண்மை என்பது பிறிதொரு கேள்வி.

"தமிழர்கள், தமது மத்தியிலுள்ள இளைஞர்களை வெளிநாடுகளுக்கு இராணுவப் பயிற்சிபெற அனுப்புவது உண்மையாயின், அது ஏற்கெனவே படிப்படியாக மோசமடைந்து வரும் தமிழர்—சிங்களவர் மோதலை இன்னும்மோசமாக்கிவிடும்"

இவ்வாறு கார்டியன் கட்டுரை கூறுகிறது.

### சட்டமா அதிபரிடம்...

—1-ம் பக்கத் தொடர்

பாக, பரராசாவின் தந்தை திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம் சட்டமா அதிபரிடம் ரூபா 50,000 நட்ட ஈடு கோரி அறிவித்தல் விடுத்திருக்கிறார்.

திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் சார்பில் இந்த நட்ட ஈடு கோரும் இந்த அறிவித்தலை சட்டமா அதிபருக்கு சட்டத்தரணி வி. யோகேஸ்வரன் அனுப்பி வைத்துள்ளார்.

நட்டஈடு கோரி யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவிருப்பதாக சட்டத்தரணி திரு. வி. யோகேஸ்வரன் சட்டமா அதிபருக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

### தமிழீழம் அமைப்...

—3-ம் பக்கத் தொடர்

ஆகவே தமக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் உரிமைகளைச் சரிவரப் பாவித்து தமிழ் அரசாங்க ஊழியர்களும் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராட முன்வரவேண்டும்'' என்றார்.

அவரை அடுத்து திரு. கனக. மனோகரன் உரையாற்றினர்.

"பாலங்கள் தருகின்றோம், பள்ளிக்கூடம் தருகின்றோம், உத்தியோகங்கள் தருகின்றோம்'' எனச் சிலர் ஆசை வார்த்தைகள் கூறுவார்கள். நாம் அப்படிப்பட்ட மயக்கு மொழிகளைக் கூற இங்கு வரவில்லை. குடும்பப் பிரச்சினை என்று சொல்லிக்கொண்டு இனியும் நாம் தமிழ் ஈழப் போராட்டத்தினின்றும் ஒதுங்கி வாழ முடியாது. குட்டக் குட்டக் குனிகின்றவர்களுடனும் குனியக் குனியக் குட்டுபவர்களுடனும் இனியும்நாம் கூடி வாழமுடியாது. நாம் வாழவேண்டின் நம்மை நாமே ஆளவேண்டும். "கூண்டுக்கிளிநிலை எத்தனைநாள் வரை, கூப்பிடு கூப்பிடு வீரர்களை'' என்றார் உணர்ச்சிக் கவிஞர். அவரின் அந்த ஆணையை ஏற்று ஆட்சேர்க்க— தமிழ் ஈழம் அமைக்கவே நாம் இங்கு வந்திருக்கின்றோம்." என்றார் அவர்.

திரு. [illegible] நன்றியுரை கூறினர்.

### புஷ்பராசாவின்...

—1-ம் பக்கத் தொடர்

செய்யப்பட்டு தற்போது வெலிக்கடையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார். புஷ்பராசாவின் மறறோர் சகோதரியான ஜீவரததினராணியும், வரதராசாவும் அண்மையில்தான் சிறையிலிருந்து பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இச்செய்தி அச்சுக்குப் போகும்போது திரு. புஷ்பராசாவையும், செல்வி. புஷ்பராணியையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க சிறைச்சாலை ஆணையாளருடன் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தொடர்புகொண்டு ஆவன செய்கின்றனர்.

### சிறை பாதுகாப்பி...

—1-ம் பக்கத் தொடர்

டத்தில் மகேந்திரனை பொலிஸ் அதிகாரிகள் பயமுறுத்தியதாகவும், வாக்குமூலம் பெறுவது எப்படியென்று தமக்குத் தெரியுமென்றும், புலோலி வங்கிக் கொள்ளை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட ஏனைய சந்தேக நபர்களுடன் மகேந்திரனையும் சிறைச்சாலைக்கு வெளியே கூட்டிச்சென்று தாம் புதிய வாக்குமூலம் எடுக்கப்போவதாகவும் குறித்த பொலிஸ் அதிகாரிகள் மிரட்டினார்களாம்.

இது சம்பந்தமாக, சிறைச்சாலை ஆணையாளர் ஊடாக பிரதமருக்கு மகேந்திரன் செய்துள்ள விண்ணப்பம் ஒன்றில், தனது உயிருக்கும் வாழ்வுக்கும் குறித்த பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து பாதுகாப்பு தருமாறு கேட்டுள்ளார்.

### தென்னுபிரிக்க...

—1-ம் பக்கத் தொடர்

லேயே வாழ்ந்து வருகின்றனர். இருந்தாலும், இலங்கை ஆட்சியல் பாராளுமன்றம் மட்டுமே உள்ளது; மொழி அடிப்படையில் அமைந்த மாநிலங்கள் என்ற அரசியல் அமைப்பு அங்கே இல்லை. அது இல்லையாகவே, — சிறுபான்மையாக உள்ள தமிழ் மக்கள் (இன உணர்ச்சி மிகுதியாக உள்ள இன்றையச் சூழ்நிலையில்) தங்களுக்குரிய எந்த உரிமையையும், வாக்குச் சீட்டு மூலமே கோரிப் பெறக்கூடிய நிலை அங்கே இல்லை. எந்த ஒன்றிலும் அவர்களுககுப் பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பு இல்லை அலலவா? இப்படிப் பட்ட ஒரு நெருக்கடியே அங்குள்ள தமிழ் மக்களைத் தனிநாடு கோரும் எல்லைக்குத் தள்ளி இருக்கிறது என்பது தெளிவு.

"உரிமைப்பறிப்பு என்பது சிறிதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும், பாதிககப்பட்டவர்களுக்கு அது பெரிய இழப்பே; அது, —வேண்டாத விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடவே செய்கிறது!

'உரிமை இழந்து தவிக்கும் தென்னுபிரிக்க மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இலங்கைப் பிரதமர், — தம்முடைய நாட்டின் தமிழர் உரிமைப் பிரச்சினையிலும் உடனடியாகக் கவனம் செலுத்துவார் என்று விருமபி எதிர்பார்க்கிறோம்.

வீட்டுத் தூய்மைக்குச் சிறந்த வழி! இலையான், கொசு, நுளம்பு, பூச்சி, புழு உபத்திரவம் நீங்க ஒரு வழி!!

நீம் சுகாதார தூபம் பாவிப்பதே.
ஒரு பைக்கற் 25 சதம் மட்டுமே.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயக்க வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் ஒக்டோபர்மாதம் 13ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org